**செங்கோட்டை நகராட்சியின் அவசரக் கூட்டம் 11.08.2021 அன்று நடைபெற்றது**

மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சியின் குடிநீர் கட்டணம் மற்றும் வைப்பு தொகையினை உயர்த்தி வசூலிக்க குடிநீர் உபவிதிகளில் திருத்தம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.32853/2018/குவ3 நாள்.03.02.2021ன் படி பொது அங்கீகாரம் வழுங்கப்பட்டுள்ளது மேற்படி பொது அங்கீகாரம்ட வழுங்கப்பட்ட குடிநீர் உபவிதிகளை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கு ரூ.37800/- குடிநீர் நிதியில் செலவிட மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம்**

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு வளாத்திலுள்ள தண்ணீரை பகுப்பாய்வு செய்து அறிக்கை பெறுவதற்கு ரூ.5310 தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், திருநெல்வேலிக்கு செலுத்தவும் அதற்கான செலவினத்தை - குடிநீர் நிதியில் செலவிட மன்றத்தின் அனுமதிக்கு

(ந.க.எண்.1074/2019/இ1)

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம்**

அனுமதி வழங்கப்பட்டது.

**செங்கோட்டை நகராட்சியின் சாதாரண கூட்டம் 31.08.2021 அன்று நடைபெற்றது**

<u>மன்றப்பொருள் :</u>

15வது மத்திய குழு மான்யம் 2020-2021ன் கீழ் ரூ.27.00 லட்சம் மதிப்பீட்டில் கீழ்காணும் பணியினை செய்ய 10.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

| வேலையின் பெயர் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| செங்கோட்டை நகராட்சி காந்தி ரோடு நீர்தேக்க நிலைய சாலை சந்திப்பு முதல் வாஞ்சிநாதன் நிலை வரை குடிநீர் விநியோக குழாய் அமைத்தல் மற்றும் தலைமை நீரேற்று நிலையத்தின் மின் மோட்டார்கள் நிறுவுதல் | 1) திரு.எம்.பெரியசாமி பாண்டியன், சொக்கம்பட்டி | ஒப்பந்த மதிப்பீட்டை விட 7.78% அதிகம் |
| | 2) திரு.பி.இருளப்ப பாண்டியன், சொக்கம்பட்டி | மதிப்பீட்டு விதிதம் |

அலுவலகக் குறிப்பு :

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் திரு.பி.இருளப்ப பாண்டியன் என்பவரால் மதிப்பீட்டு வகிதத்தில் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1117/2020/இ1)

**தீர்மானம்**

**அனுமதி வழங்கப்பட்டது.**

மன்றப்பொருள் :

15வது மத்திய குழு மான்யம் 2020–2021ன் (II Instalment) கீழ் ரூ.5.60 லட்சம் மதிப்பீட்டில் கீழ்காணும் பணியினை செய்ய 10.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

| வேலையின் பெயர் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| சுப்பிரமணியபுரம் இலத்தூர் சாலையில் உரக்கிடங்கிற்கு Bailing Machine விநியோகம் செய்து நிறுவுதல் | 1) S.R.Enterprises Thiruvattiyur Chennai | ஒப்பந்த மதிப்பீட்டை விட 0.18% குறைவு |
| | 2) Walajapet Agro Engineering Service Co-opetative Centre Ltd Vellore | ஒப்பந்த மதிப்பீட்டை விட 5.36% அதிகம் |

அலுவலகக் குறிப்பு :

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் S.R.Enterprises Thiruvattiyur Chennai என்ற நிறுவனத்தால் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1117/2020/இ1)

**தீர்மானம்**

**அனுமதி வழங்கப்பட்டது.**

மன்றப்பொருள் :

தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 17.8.2021 ம் நாளய காணொலி ஆய்வுக்கூட்ட அறிவுரையில் செங்கோட்டை நகராட்சிப் பகுதியில் Bio Mining திட்டம் செயல்படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்துள்ளார்கள். மேற்படி அறிவுரைகளின் படி செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட இலத்தூர் சுப்பிரமணியபுரத்தில் அமைந்துள்ள நகராட்சி உரக்கிடங்கில் Bio Mining திட்டம் செயல்படுத்திட ரூ.252.00 இலட்சத்திற்கான மதிப்பீடு தயர் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை அரசின் முழு மானியம் பெற்று செயல்படுத்திட உரிய திட்ட மதிப்பீட்டு பிரேரேணை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு :

அரசின் முழு மானியம் பெற்று பணி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம்**

**அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள்**

செங்கோட்டை நகராட்சியின் சுதந்திர தின விழா அழைப்பிதழ் கலர் தாள் அ4 அளவில் அச்சடித்து அனைத்து உள்ளூர் முக்கியத் தலைவர்களுக்கு அனுப்ப வேண்டி இருப்பதாலும், அவசர அவசியம் கருதி உடன் பணிகள் மேற்கொள்ள வேண்டி இருப்பதாலும், தகுதியான உள்ளூர் அச்சுடிப்பாளர்களிடமிருந்து விலைப்புள்ளி 12–08–2021ம் தேதி கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | சிவ சங்கரி ஜெராக்ஸ், செங்கோட்டை ஏன்பவரது ஒப்பந்தப்புள்ளி விபரம் | க்யூடெல் கம்ப்யூட்டர் அன்டு டிடிமி சென்டர், ஏன்பவரது ஒப்பந்தப்புள்ளி விபரம் | பிரண்ட்ஸ் கம்ப்யூட்டர்ஸ்ஏன்பவரது ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சியின் சுதந்திர தின விழா அழைப்பிதழ் கலர் தாள் அ4 அளவில் அச்சடிக்கும் பணி – 100 எண்ணம் | ரூ.10 / பக்கம் ஒன்றுக்கு | ரூ.11 / பக்கம் ஒன்றுக்கு | ரூ.12 / பக்கம் ஒன்றுக்கு |

(ந.க.எண் ; 902/2017/டி2)

அலுவலகக் குறிப்பு ;

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய சிவசங்கரி ஜெராக்ஸ், செங்கோட்டை விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. ஆவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி மேற்கண்ட பணி மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி கோரியதனை மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி செலவுத் தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**அனுமதி வழங்கப்பட்டது.**